# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

**முறையீட்டு மனு எண்: 205/மா/2017**
**ஆணை நாள்: 07–12–2018**

திருமதி. R. சிவகாமி,
தஞ்சாவூர். --- **முறையீட்டு மனுதாரர்**

ஆணையர்,
தஞ்சாவூர் மாநகராட்சி. --- **எதிர் மனுதாரர்**

தஞ்சாவூர் மாநகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து ஒய்வு பெற்ற திருமதி. சிவகாமி, த/பெ. ரங்கசாமி என்பவரது 23/10/2017 தேதியிட்ட முறையீட்டு மனு 24.10.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீட்டு மனு எண்.205/மா/2017 எண்ணிடப்பட்டு, சம்மந்தப்பட்ட மாநகராட்சி ஆணையரிடம் இருந்து அறிக்கைகள் பெற்று, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை

தஞ்சாவூர் மாநகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து 30.06.2016ல் பணி ஓய்வு பெற்றுள்ள திருமதி. சிவகாமி தான் பணி ஓய்வு பெற்று 15 மாதங்கள் கடந்த நிலையில் தனக்கு இன்னுமும் ஓய்வூதியம் மற்றும் இதரபலன்கள் வழங்கப்படவில்லை என தெரிவித்து முறையீடு செய்துள்ளார். ஆனால் அதே தேதியில் ஓய்வு பெற்ற அலுவலர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் இதர ஓய்வூதிய பலன்கள் வழங்கப்பட்டு விட்டதாகவும் சம்மந்தப்பட்ட பிரிவு அலுவலர் வேண்டும் என்றே நடவடிக்கை எடுக்காமல் முடக்கி வைத்துள்ளதாகவும் தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளார்.

திருமதி. R. சிவகாமி, துப்புரவு பணியாளர் (ஓய்வு) என்பவரது முறையீட்டு மனு மீதான தஞ்சாவூர் மாநகராட்சியின் ஆணையரின் அறிக்கை 26.10.2017 நாளிட்ட இம்முறைமன்ற நடுவத்தின் அறிவிப்பாணையின்படி கோரப்பட்டது. தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர், தனது 01.11.2017 நாளிட்ட அறிக்கையில் 30.06.2016 அன்று ஓய்வு பெற்ற திருமதி. R. சிவகாமி என்பவரால் 17.11.2016 அன்று தனது ஓய்வூதிய விண்ணப்பம் அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட்டு 28.11.2016ல் அன்னாரின் பதிவேட்டில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து வழங்கக் கோரி சம்மந்தப்பட்ட பிரிவு எழுத்தருக்கு அனுப்பி குறைகள் சரி செய்யப்பட்டு ஓய்வூதியம் அனுமதிக்கக் கோரி உதவி இயக்குனர், உள்ளாட்சி நிதி தணிக்கை, தஞ்சாவூர் அவர்களுக்கு ந.க.எண். 11478/2016/பி2 நாள்:15.06.2017-ன்படி முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளது என்றும், அன்னாரின் பணிப்பதிவேட்டில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்து அனுப்பக்கோரி உதவி இயக்குனர், உள்ளாட்சி நிதி தணிக்கை தஞ்சாவூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 299/2017/த1, நாள்: 09.08.2017ன்படி அனுப்பப்பட்டு நிலுவையில் உள்ளதாகவும், குறைபாடுகளை நிவர்த்தி செய்து ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், உள்ளாட்சி நிதி தணிக்கை துறையிலிருந்து தணிக்கை சான்று பெற்றபிறகு மனுதாரருக்கு ஓய்வூதிய அனுமதி உத்தரவு வழங்கப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் நிலுவைத் தொகைகள் வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் ஆணையர் தனது அறிக்கையில் மனுதாரர் தனது மனுவில் நான்கு பணியாளர்களுக்கு ஓய்வூதிய ஆணை வழங்கப்பட்டுள்ளது என்பது முற்றிலும் தவறானது என்றும், 30.06.2016ல் ஓய்வு பெற்ற திரு.கோவிந்தராஜ், திருமதி. ருக்மணி, திருமதி. சாரதா, திருமதி.பாப்பாயி ஆகிய நான்கு துப்புரவு பணியாளர்களில், திருமதி, ருக்மணி மற்றும் திரு.கோவிந்தராஜ் ஆகிய இருவரும் ஜூலை 2016ல் ஓய்வூதிய விண்ணப்பம் அலுவலகத்தில் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் திருமதி. சாரதா 29.8.2016ல் ஓய்வூதிய விண்ணப்பம் அலுவலகத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும் திருமதி. பாப்பாயி என்பவர் ஜனவரி 2017ல் தனது ஓய்வூதிய விண்ணப்பத்தினை அலுவலகத்தில் தாக்கல் செய்து அன்னாருக்கு ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அன்னாருக்கு ஓய்வூதியம் அனுமதிக்கப்படவில்லை என்றும் இதில் எந்தவித காலதாமதமும் ஏற்படவில்லை என்றும் மேற்படி பணியாளர்கள் அளித்துள்ள விண்ணப்பங்களின் தேதியின் அடிப்படையில் உடனுக்குடன் நடவடிக்கை

மேற்க்கொள்ளப்பட்டுள்ளது என்றும் பழிவாங்கும் நோக்கம் ஏதும் இல்லை என்றும் மனுதாரர் கூறிய தகவல்கள் உண்மையில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

மாநகராட்சியில் ஒருபிரிவில் குறைபாடுகள் சரி செய்ய நிலுவையில் உள்ளது என அறிக்கை அனுப்பியிருப்பது பாராட்டுக்குரிய செய்தியாக இல்லை என்பதை இம்முறைமன்ற நடுவம் பதிவு செய்ய விரும்புகின்றது.

இந்நேர்வில் தஞ்சாவூர் ஆணையர் அவர்களின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டது. ஓய்வு பெற்ற துப்புரவு பணியாளர் திருமதி. சிவகாமி என்பவருக்கு வழங்கப்பட வேண்டிய ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய பலன்கள் 2.1/2 ஆண்டு காலமாக வழங்கப்படாமல் உள்ளது. எனவே, உரிய நடவடிக்கை மேற்கொண்டு முறையீட்டு மனுதாரருக்கு வழங்க வேண்டிய ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய பலன்களை விரைவில் வழங்கி அதற்கான அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 7–ஆம் நாளன்று என்னால் கையெப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.

18/12/18

பெறுநர்

1. திருமதி. R. சிவகாமி,
   D/o. ரங்கசாமி, 162பி மேல் லைன்,
   மாட்டுசந்தை அருகில், AYA நாயர் சாலை,
   வடக்கு வாசல் அஞ்சல்,
   தஞ்சாவூர் – 613 008.

2. ஆணையர்,
   தஞ்சாவூர் மாநகராட்சி,
   தஞ்சாவூர்.

3. இயக்குனர்,
   உள்ளாட்சி நிதி தணிக்கை,
   சென்னை.